கோயமுத்தூர்-641 018. 94425 66856, 63690 81949


# சூப்பர் சேல்ஸ் இந்தியா லிமிடெட்

CIN : L17111TZ1981PLC001109

பதிவு அலுவலகம் : 34-ஏ, காமராஜ் ரோடு, கோயமுத்தூர்-641018

தொலைபேசி: 0422 - 2222404-405 பேக்ஸ்: 0422 - 2221427

இணையதளம்: www.supersales.co.in மின்னஞ்சல்: ssil@vaamaa.com


## 41வது வருடாந்திர பொதுக்கூட்டம்

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. நிறுவனத்தின் 41வது பங்குதாரர் வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") ஜூலை 28, 2023, வெள்ளிக்கிழமை அன்று இந்திய நேரம் மதியம் 4.35 மணியளவில் பங்குதாரர் வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்காக இனி அனுப்பப்படவிருக்கும் அறிவிப்பில் ("AGM Notice") இடம்பெற்றுள்ள விஷயங்களை காணொளி காட்சி ("Video Conferencing/VC")/ பிற ஒலி ஒளி காட்சி வழிமுறைகள் ("OAVM") எனும் மின்னணு நுட்பங்களின் வாயிலாக நடைபெறும். தொடரும் கோவிட் - 19 தொற்று நோய் பரவலை கருதியும் மேலும் நிறுவனங்கள் சட்டம், 2013-இன் விதிமுறைகள் மற்றும் அதனுடன் வடிவமைக்கப்பட்ட விதிகள் மற்றும் இந்திய காப்பாவாண பரிமாற்று வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015, இவற்றுடன் சேர்த்து 2020-ம் வருடம் ஏப்ரல் 8, 13, மே 5, 2021ம் வருடம் ஜனவரி 13, 2022-ம் வருடம் மே 5 மற்றும் டிசம்பர் 28 என முறையே தேதியிடப்பட்ட நிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் பொது சுற்றறிக்கைகள் எண். 14/2020, 17/2020, 20/2020, 02/2021, 02/2022 மற்றும் 10/2022 ("MCA சுற்றறிக்கைகள்") ஆகியவற்றுடன் மே 12, 2020, ஜனவரி 15, 2021, மே 13, 2022 மற்றும் ஜனவரி 5, 2023 தேதியிட்ட இந்திய காப்பாவாண பரிமாற்று வாரியத்தின் சுற்றறிக்கைகள் ("SEBI சுற்றறிக்கைகள்") ஆகியவற்றின் வழிகாட்டுதலுக்கு இணங்க இந்த கூட்டமானது, வழக்கமாக உறுப்பினர்கள் பொது இடத்தில் கூடி சந்திக்கும் முறையில் இல்லாமல், காணொளி காட்சி ("Video Conferencing")/பிற ஒலி ஒளி கூட்டமாக கூட்டப்படும் என இயக்குநர் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. மேலே சுட்டி காட்டப்பட்டுள்ள MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI சுற்றறிக்கைகள் ஆகியவற்றிற்கு இணங்க 41வது வருடாந்திர பொது குழு கூட்ட அறிவிப்பு ("AGM Notice") மற்றும் 2023-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் உள்ளடக்கிய ஆண்டு அறிக்கை("Annual Report")ஆகியவை மின்னஞ்சல் வாயிலாக மட்டும், தங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்திடமோ/பதிவு மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் ("RTA") அல்லது தங்கள் டெபொசிட்டரி பங்கேற்பாளர்களிடமோ ("DP") பதிவுசெய்திருக்கும் உறுப்பினர்களுக்கு மட்டும் அனுப்பப்படும். உறுப்பினர்கள் 41வது AGM-ல் VC/OAVM வசதி மூலமாக மட்டுமே கூட்டத்திற்குள் நுழைந்து பங்கேற்க முடியும். 41வது AGM-ல் பங்கேற்பதற்கான வழிமுறைகள் மற்றும் கூட்டத்திற்கு முந்தைய தொலை மின்னணு வாக்களிப்பு அல்லது கூட்டம் நடைபெறும் சமயத்தில் நடைபெறும் மின்னணு வாக்களிப்பு ஆகியவற்றில் மூலம் வாக்களிக்கும் முறை ஆகியவை 41வது AGM அறிவிப்பில் ("AGM Notice") விவரிக்கபட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் சமயத்தில், VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 103-ன் கீழ் கூட்டத்தில் பங்குபெற்ற உறுப்பினர் எண்ணிக்கையை ("Quorum") கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.
3. 41வது பங்குதாரர் வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கான அறிவிப்பு ("AGM Notice") மற்றும் ஆண்டு அறிக்கை ("Annual Report") நிறுவனத்தின் இணையதளத்தில் அதாவது www.supersales.co.in என்ற முகவரியிலும் மற்றும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடபட்டுள்ள பங்கு பரிவர்த்தனை நிறுவனமான BSE Limited-ன் இணையதளமான www.bseindia.com-லும் காணப்பெறலாம்.
4. நிறுவனம் மற்றும் டெபொசிட்டரிகளிடமோ தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யாது காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் 41வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு("AGM Notice"), ஆண்டு அறிக்கை ("Annual Report") மற்றும் / அல்லது நடைபெற உள்ள உறுப்பினர்கள் 41வது வருடாந்திர பொது கூட்டத்திற்குள் உள்நுழைவு, VC/OAVM வசதி மூலம் மின் வாக்குபதிவு ஆகிய விவரங்களை பெற பின்வரும் ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை மின்னஞ்சல் மூலம் info@skdc-consultants.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். தேவைப்படும் ஆவணங்கள்:
   - அ) உங்கள் பெயர், பங்குகளின் போலியோ எண் மற்றும் முழுமையான முகவரி குறிப்பிடபட்ட கோரிக்கை மின்னஞ்சல்
   - ஆ) பங்கு சான்றிதழின் நகல் (முன்பக்கம் மற்றும் பின்பக்கம்)
   - இ) வருமான வரி துறையினரால் வழங்கப்பட்ட நிரந்தர கணக்கு எண் அட்டையின்(PAN Card) சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்; மற்றும்
   - ஈ) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் முகவரிக்கு ஆதரவாக எந்தவொரு ஆவணத்தின் (ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அட்டை, பாஸ்போர்ட் போன்றவை) சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்
5. எலக்ட்ரானிக் கிளியரிங் சேவை("ECS/NACH") அல்லது வேறு எந்த மின்னணு வாயிலான வங்கி ஆணை ("Electronic Bank Mandate") வாயிலாக தங்கள் வங்கி கணக்கில் நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை பதிவு செய்யாது காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், தங்கள் வங்கி கணக்கில் நேரடியாக ஈவுத்தொகையை பெற தங்கள் மின்னணு வங்கி ஆணையை ("Electronic Bank Mandate") முன் கூட்டியே பதிவு செய்ய மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் கோர் வங்கி முறையை ("Core Banking Solutions") அமல்படுத்திய பின்னர் வங்கியாளரால் வழங்கப்பட்ட காசோலையை தாமே ரத்து செய்து, பின்னர் அதில் சுயசான்றளித்து பின்னர் அதை ஸ்கேன் செய்து அதனின் நகல்(கூட்டாக பங்குகளை வைத்திருந்தால் முதல் பங்குதாரரின் பெயர் காசோலையில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்) ஆகியவற்றை info@skdc-consultants.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்.
6. மின்னணு வடிவத்தின் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட டெபொசிட்டரி பங்கேற்பாளரிடம் ("Depository Participants") கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கி கணக்கு விவரங்களை புதுப்பிக்கலாம்.
7. நிதிச் சட்டம் 2020ன் படி("Finance Act, 2020") நிறுவனமானது, 2020-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல், வருமான வரி சட்டம் 1961("IT Act") அதன் தற்போதைய திருத்தங்கள் உட்பட, வாயிலாக நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கபடும் ஈவுத்தொகையிலிருந்து வரி ("TDS") பிடித்து மீதம் உள்ள தொகையை உறுப்பினர்களுக்கு வழங்கும். பல்வேறு பிரிவுகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட விகிதங்கள், வரிப்பிடித்தம் செய்யாமல் இருக்க ("Nil TDS")/முன்னுரிமை விகிதத்தில் வரி பிடித்தம் ("Preferential TDS") மற்றும் அதற்கான விவரங்கள்/ஆவணங்களுக்கான நிபந்தனைகளுக்கு, உறுப்பினர்கள் வருமானவரிச் சட்டத்தை பார்க்கவும்.
8. மின்னணு வங்கி ஆணையை ("Electronic Bank Mandate") பதிவு செய்யாத உறுப்பினருக்கு ஈவுத்தொகையை நிறுவனம் நடைமுறை காரணங்களால் செலுத்த முடியாவிட்டால், நிறுவனம் அத்தகைய உறுப்பினருக்கு ஈவுத்தொகை ஆணைப்பத்திரத்தை ("Dividend Warrant") வருடாந்திர பொது குழு கூட்டம் முடிந்து 30 நாட்களுக்குள் உறுப்பினரின் முகவரிக்கு அனுப்ப ஆவண செய்யும். ஈவுத்தொகை வழங்க AGM-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டால், 2023 மார்ச் 31ம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான ஈவுத்தொகைக்கான உறுப்பினர்களின் உரிமை ஜூலை 21, 2023 அன்று அலுவலக நேர முடிவில் பெறப்படும் விவரங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் என்பதை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI-ன் சுற்றறிக்கைகளுக்கு இணங்க மேற்கண்ட தகவல்கள் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவலுக்கும் மற்றும் பயனுக்காகவும் வழங்குகிறது.

நிர்வாக குழு ஆணைப்படி

**சூப்பர் சேல்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக**

S.K. ராதாகிருஷ்ணன்
நிறுவனச் செயலாளர்

கோயமுத்தூர்
27.06.2023

**Published in Dinamalar News Paper on 28.06.2023**

For Kanoria Chemicals & Industries Limited
Neha Saraf
Company Secretary
Membership No.: ACS 27024

Place : Kolkata
Date : 27th June, 2023

# SUPER SALES INDIA LIMITED

CIN : L17111TZ1981PLC001109
Regd. Office: 34-A, Kamaraj Road, Coimbatore - 641018
Ph : 0422 - 2222404-405 Fax : 0422 - 2221427
Website: www.supersales.co.in E-Mail: ssil@vaamaa.com

## 41st AGM TO BE HELD IN VIDEO CONFERENCE/OAVM MODE

Dear Member(s),

1. **Shareholders may note that the 41st Annual General Meeting ("AGM") of the Company will be convened at 04.35 PM IST, on Friday, the 28th Day of July, 2023 through Video Conference ("VC")/Other Audio Visual Means ("OAVM") facility** to transact the business as set out in the Notice which will be circulated for convening the AGM. In view of the continuing Covid-19 pandemic and in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with General Circular Nos.14/2020, 17/2020, 20/2020, 02/2021,02/2022 and 10/2022 dated 8th April, 2020, 13th April, 2020, 5th May, 2020,13th January, 2021, 5th May, 2022 and 28th December 2022 respectively, issued by the Ministry of Corporate Affairs ("MCA Circular(s)") and SEBI Circulars dated 12th May, 2020,15th January, 2021,13th May, 2022 and 5th January, 2023 ("SEBI Circulars"), the Board of Directors have decided to convene and conduct the AGM through VC/OAVM facility without the physical presence of the Members at a common venue.
2. **The Notice of the 41st AGM and the Annual Report for the year 2023, including the Financial Statements for the year ended 31st March, 2023 ("Annual Report") will be sent only by e-mail to all those members,** whose e-mail addresses are registered with the Company/RTA or with their respective Depository Participants ("DP"), in accordance with the MCA Circulars and the SEBI circulars as mentioned above. Members can join and participate in the 41st AGM through VC/OVAM facility only. The instructions for joining the 41st AGM and the manner of participation in the remote e-voting or casting vote through the e-voting system during the 41st AGM are provided in the Notice of the 41st AGM. Members participating through the VC/OAVM facility shall be counted for the purpose of reckoning the quorum under section 103 of the Companies Act, 2013.
3. Notice of the 41st AGM and the Annual Report will be made available on the website of the Company i.e.,www.supersales.co.in and the website of Bombay Stock Exchange Limited in which the Company's equity shares are listed i.e., www.bseindia.com.
4. **Members holding shares in physical form who have not registered their e-mail** addresses with the Company / RTA can obtain Notice of the 41st AGM, Annual Report and/or login details for joining the 41st AGM through VC/OAVM facility including e-voting, by sending scanned copy of the following documents by e-mail to info@skdc-consultants.com:
   a. Request e-mail mentioning your name, folio number and complete address
   b. Copy of the Share Certificate (Front & Back)
   c. Self-attested scanned copy of the PAN Card; and
   d. Self-attested scanned copy of any document (Such as Aadhar card, Driving License, Voter ID, Passport) in support of the address of the Members as registered with the Company.
5. **Members holding shares in physical form who have not updated their mandate** for receiving the dividends directly in their bank account through Electronic Clearing Service ("ECS/NACH") or any other means ("Electronic Bank Mandate"), can register their Electronic Bank Mandate to receive dividends directly into their bank account electronically, by sending a self-attested scanned copy of the cancelled cheque, issued by Banker after implementation of the Core Banking System, bearing the name of the Sole Shareholder (in case of joint holding, the name of the first holder shall be mentioned in the cheque leaf) in addition to the documents mentioned in paragraph 4 above by e-mail to info@skdc-consultants.com .
6. **Members holding shares in demat form** can update their e-mail address & bank account details by submitting a request to the concerned Depository Participant.
7. Pursuant to Finance Act, 2020 dividend income will be taxable in the hands of the shareholders w.e.f. 1st April, 2020 and the Company is required to deduct tax at source ("TDS") from dividend paid to the Members at the prescribed rates in the Income Tax Act, 1961 ("the IT Act") and latest amendments. For the prescribed rates for various categories, conditions for Nil/preferential TDS and details / documents required thereof, members are requested to refer to the IT Act.
8. Members may kindly note that in the event the Company is unable to pay the dividend to any member by electronic mode, due to non-registration of the Electronic Bank Mandate, the Company shall dispatch the dividend warrant to such members within 30 days from the date of AGM. Members may also kindly note that the company has fixed Friday, 21st July, 2023 as the cut-off date for determining entitlement of members to dividend for the financial year ended 31st March, 2023, if approved at the AGM.

The above information is being issued for the information and benefit of all the Members of the Company and is in compliance with the MCA Circulars and the SEBI Circulars.

By order of the Board
For **SUPER SALES INDIA LIMITED**
**S.K. RADHAKRISHNAN**
Company Secretary

Coimbatore
27.06.2023

**Published in Financial Express on 28.06.2023**